Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |
|---|---|

வேணு : 18 | ஆகஸ்டு 2012 | கானம் : 1

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன் துணை**

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை-83.**

**ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனின்**

**பத்தொன்பதாவது வருட ப்ரஹ்மோத்ஸவப் பத்திரிக்கை**

இடம் / Place: மதுரபுரி / Madhurapuri தேதி / Date: **09.08.2012** to **18.08.2012**

## நிகழ்ச்சி நிரல் / PROGRAMME

| | | | |
|---|---|---|---|
| 09-08-2012 | வியாழன் | இரவு | நந்தோத்ஸவம்<br>ஹம்ஸ வாஹனம் |
| 10-08-2012 | வெள்ளி | மாலை | சேஷ வாஹனம் |
| 11-08-2012 | சனி | மாலை | ஸிம்ஹ வாஹனம் |
| 12-08-2012 | ஞாயிறு | மாலை | புன்னைமர வாஹனம் |
| 13-08-2012 | திங்கள்<br>ஏகாதசி | காலை<br>மாலை | விசேஷ திருமஞ்ஜனம்<br>கருடஸேவை |
| 14-08-2012 | செவ்வாய்<br>துவாதசி | காலை<br>மாலை | கோவிந்த பட்டாபிஷேகம்<br>யானை வாஹனம் |
| 15-08-2012 | புதன் | மாலை | நிகுஞ்ஜோத்ஸவம் |
| 16-08-2012 | வியாழன் | காலை<br>மாலை | குதிரை வாஹனம்<br>ஜானவாஸம்-நாதஸ்வரம்-கடலூர் ஸ்ரீபாலசந்தர் & ஸ்ரீபாலமுருகன் குழுவினர் |
| 17-08-2012 | வெள்ளி | காலை<br>மாலை | ஸ்ரீராதாகல்யாணம்<br>தெப்போத்ஸவம் |
| 18-08-2012 | சனி | காலை | ரதோத்ஸவம், விடையாற்றி |

பாகவதோத்தமர்கள் வந்திருந்து கதாச்ரவணம், நாமஸங்கீர்த்தனம் மற்றும் உத்ஸவ வைபவங்களில் கலந்துகொண்டு, பகவத் கிருபைக்கும், குரு கிருபைக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மதுரபுரி
ஆஷாட ஏகாதசி

இப்படிக்கு
மஹாரண்யம்
ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

*Hare Rama Hare Rama Rama Rama Hare Hare Hare Krishna Hare Krishna Krishna Krishna Hare Hare*

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளீ

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 18 | ஆகஸ்டு 2012 | கானம் : 1

Delivered by India Post www.indiapost.gov.in



ஸ்ரீராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் ஸ்ரீகௌதமானந்தருடன் ஸ்ரீஸ்வாமிஜி
ஜூலை 15, 2012




ஜூன் 28, 2012 – திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் –
மா தேவகி பாடசாலா டிரஸ்ட் சார்பாக "ரிக்வேதபாடசாலை" துவக்க விழா



ஜூலை 15, 2012 – ஸ்ரீராமகிருஷ்ணாமடம்
ஸ்ரீராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா





ஜூன் 27 – ஸ்ரீபெரும்புதூர் விவேகானந்தா வித்யாலயா
ஸ்ரீகோபாலகிருஷ்ணஸ்வாமி கோவில் கும்பாபிஷேம்



ஜூலை 8-12 – திருச்சி ராமலிங்க நகர் ஸ்ரீசிவானந்தா பாலாலய
பள்ளி பக்த விஜயம் உபன்யாசம்





ஜூலை 3 –
மதுரபுரீ
ஆஸ்ரமம் –
குருபூர்ணிமா




பக்த பிரஹலாத
நாடகம் –
கோபகுடீர
குழந்தைகளுக்கு
பரிசு வழங்குதல்



# ஆஷாட ஏகாதசி – ஜூன் 30, 2012
# விட்டலாபுரம் பாண்டுரங்கன் கோவிலில்







ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:18 ஆகஸ்டு 2012 கானம்:1

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே**

உண்மையான பக்தன்,
தனது இஷ்ட தெய்வத்திற்கு
முன்னால், கோபத்தை
வெளிப்படுத்துவானா
என்ன?
கோபம் பொல்லாதது;
அது அன்பையும்,
பக்தியையும் விரட்டி விடும்.

- *ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்*

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் – 197 | 3 |
| மதுர யாத்திரை | 8 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 |
| பாகவத பழம் – 29 | 13 |
| ஸ்ரீசுதர்சன சதகம் | 17 |
| ஆலய தரிசனம் | 29 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| ப்ருந்தாவன கண்ணன் | 38 |
| மாலே மணிவண்ணா | 40 |
| அப்பாலுக்கு அப்பால் | 42 |

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை பற்றிய கீர்த்தனம்

– ஸ்ரீமதி ஜெயஸ்ரீ ராமகிருஷ்ணன், ஆஸ்திரேலியா

---

ராகம் : பூபாளம் தாளம் : ஆதி

அதிகாலை பனி காற்று முகத்தை வருடும் சுகம்
மதி சோலை தனில் நின்று ஒளிர்ந்திடும் ரம்யம்

தோகை விரித்தாடும் மயிலின் லாவண்யம்
பரந்து விரிந்தலையும் கடலின் கம்பீரம்

தளிர் நடை சிசுவின் குறும்பின் இன்பம்
வெளிர் நிற நறு மலர் மாலையின் சுகந்தம்

மனதைத் தொடும் மதுர இசை தரும் த்யானம்
கருத்தைத் தொடும் நல் உரை தரும் மௌனம்

இவை ஒத்த இன்னும் பல இன்பமும் பெரிதோ?
குருமுக தரிசனத்திற்கு இவை இணையாமோ?

கனிந்த நற்பார்வையும் காந்த புன்னகையும்
மனதை உருக்கிடும் மதுரச் சொற்களும்

தாயின் வாத்ஸல்யமும் தந்தையின் பொறுப்பும்
தெய்வத்தின் அருளும் குடிகொண்ட குருவே!

வேக வாழ்க்கையில் நின் நினைவே ஆனந்தம்
அகம் நீங்காமல் என்றும் நிறைந்திருப்பீரோ?!?

–3.7.2012 குருபூர்ணிமா
அன்று சமர்ப்பிக்கப்பட்ட பாடல்.

# மதுரமான
# மஹனீயர் – 197

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

திரு.நந்தகுமார் எனும் அன்பர், மாயவரத்தை பூர்வீகமாகக் கொண்டவர். ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுக்கு பாத்திரமான குடும்பங்களில், இவரது குடும்பமும் ஒன்று. தனது வாழ்வின் பல கஷ்டமான தருணங்களில் குருநாதரின் கருணையானது, தன்னை எப்படி காப்பாற்றியது என்பதை நந்தகுமார் உருக்கமுடன் சொல்வது உண்டு. புயல் காற்றின் நடுவில் கப்பலுக்கு நங்கூரம் எப்படியோ, அப்படி குருவின் கருணை, ஒருவனை வாழ்வின் துன்பங்களில் இருந்து காப்பாற்றும். அதுபோன்று, நந்தகுமார் வாழ்வில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய சில சம்பவங்களை பற்றி இங்கு பார்க்க போகிறோம்.



நந்தகுமாரின் தந்தை, வக்கீலாக பணியாற்றி வந்தார். அவருக்கு சொந்தமாக நிலங்களும் இருந்தன. மாயவரத்தில் வேலை பார்த்து வந்த நந்தகுமாருக்கு, ஸ்ரீஸ்வாமிஜியின் அருளினால் திருமணமும், சென்னையில் வேலையும் கிடைத்தது. இவரது மனைவியும், வேலை பார்த்து வந்தார். திருமணமான சிலநாட்களுக்கு பின், இவரது தந்தை ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் சென்று, “மருமகள் வேலை பார்த்து வருகின்றாள். வேலையை விட்டுவிடச் சொல்ல நினைக்கின்றேன்” என்று கூறினார். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், “நீங்கள் உங்கள் மருமகள் வேலையை விடுவது என்பதைத் தவிர, எதை வேண்டுமானாலும் பேசுங்கள்” என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

பிறகு நந்தகுமாரின் தந்தைக்கு குறுகிய காலத்திற்குள்

புற்று நோய் கண்டது. முதலில் மருத்துவர்கள், “அறுவை சிகிச்சை செய்தால் வாழ்நாளை நீட்டிக்கலாம்” என்று சொன்னார்கள். ஸ்ரீஸ்வாமிஜியோ, “அவரது உறுப்புகள் செயலிழந்துவிட்டன. அறுவை சிகிச்சை அவருக்கு துன்பமே தரும்” என்று சொன்னார்கள். அதன்பிறகு பெரிய மருத்துவர்களிடம் ரிப்போர்ட்டுக்களை காண்பிக்க, அவர்களும், “வாழ்நாளை நீட்டிக்க முடியாது, அவர் வாழ்நாளை எண்ணிக்கொண்டு இருக்கின்றார்” என்று சொல்லிவிட்டார்கள். இது ஸ்ரீஸ்வாமிஜி சொன்னதை அப்படியே ஒத்து இருந்தது.

சில நாட்கள் கழித்து, ஸ்ரீஸ்வாமிஜி பிருந்தாவன யாத்திரைக்கு சென்றிருந்தார். அங்கு, ஒருநாள் மாலை, ஸ்ரீஸ்வாமிஜி, இவரது தந்தை குறித்து விசாரித்தார். அதே சமயம் இவரது தந்தை மாயவரத்தில் காலமானார். இவரது தாயார், ஹிருதய தொல்லையால் அவதிப்பட்டு வந்திருந்தார். அப்படி தன் தாய் தவிக்கும்பொழுது எல்லாம், தனது வீட்டில் வைத்து பூஜித்து வந்த குருநாதரின் திருவுருவத்தின் முன்பு, நந்தகுமார் வணங்கி பிரார்த்தனை செய்வாராம். உடன், தாயின் துன்பம் விலகிவிடுமாம். இப்படி பலமுறை நடந்து இருக்கின்றதாம்.

தந்தை காலமான பிறகு, நந்தகுமாருக்கு ஏராளமான கடன் வந்தது. கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் வந்தது. சொந்தமாக இருந்த நிலத்தை விற்க வேண்டிய சூழ்நிலை. நகைகளெல்லாம் அடகில் இருந்தது. கடன் தொல்லையினால், அவை மீட்க முடியாததாகி விடும் போலிருந்தது. பல விதத்தில் முயன்றும் நிலம் விற்கிறபாடாக இல்லை. இனி எந்த ஒரு முயற்சியும் பலனளிக்காது என்பதை உணர்ந்த நந்தகுமார், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் சென்று, “குருஜி! உங்கள் அருளினால் கஷ்டம் சரியானால் ஆகட்டும். இல்லாவிடில் அப்படியே கடனுடன் இருந்து விடுகின்றேன்” என்று சொல்லிவிட்டு, சென்னையிலிருந்து மாயவரம் கிளம்பிச் சென்றார். அந்த சமயம், ஆச்சரியமாக ஒருவர் வந்து, நிலம் வாங்க அக்ரிமெண்ட் போட்டு, அட்வான்ஸும் கொடுத்துவிட்டு சென்றார். குருவருளுக்கு நன்றி சொல்லிவிட்டு, மறுநாள் ஏலத்தில் போக இருந்த நகைகளை,

இந்த பணத்தை கொண்டு மீட்டார் நந்தகுமார். நிலம் வாங்க ஒப்புக்கொண்டவரால் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பணம் தர முடிந்தது.

இவ்வளவு கஷ்டத்திற்கு நடுவிலும், குருநாதரே இவரது இரண்டாவது தங்கைக்கு நல்ல வரனாகப் பார்த்து, திருமணம் செய்து வைத்தார். திருமணம் முடிந்த அடுத்த கணம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், இவரது மாமாவை தொடர்புகொண்டு, "என்ன செய்கின்றீர்கள்? நிலம் வாங்கியவர் பணத்தை வைத்துக்கொண்டு, உங்களைத் தேடி அலைகின்றார்" என்றார். என்ன ஆச்சரியம்! நிலம் வாங்கியவரை தேடி போனால், ஸ்ரீஸ்வாமிஜி சொன்னது அப்படியே உண்மையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக, கஷ்டங்களும் வந்தது போலவே மறையவும் ஆரம்பித்தன.

ஸ்ரீஸ்வாமிஜி, இவரை இடைவிடாது மஹாமந்திர கீர்த்தனம் செய்துவரச் சொல்லியிருந்தார். நந்தகுமாரும் அப்படியே செய்து வந்தார். இந்த கஷ்டங்களுக்கு நடுவில், இவரது மனைவி வேலையை விடாமல் இருந்தார். அவர் வேலையை விடாமல் இருந்ததால்தான், அவரது குடும்பமே சரியாக நடத்த முடிந்தது. இதனால்தான், தன் மனைவியின் வேலையை விட, அனுமதி தர ஸ்ரீஸ்வாமிஜி மறுத்து இருக்கின்றார் என்று பின்னால் உணர்ந்தார் நந்தகுமார்.

சென்னைக்கு வந்த சில வருடங்களில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளினால், ஒரு மின்னணு சாதனங்கள் தயாரிக்கக்கூடிய கம்பெனி ஒன்றைத் துவங்கினார் நந்தகுமார். எதிர்பாராதவிதமாய் அரசுத்துறையிலிருந்து ஒரு பெரிய ஆர்டர் வந்தது. அது ஒரு புதிய சாதனத்தைத் தயாரிக்க வேண்டிய ஆர்டர். அதற்காக பலவிதத்திலும் ஆறுமாத காலம் முயன்றார். எப்படி முயன்றும், அதை செய்து முடிக்க முடியவில்லை. சோர்ந்துபோன அவர், தன்னால் இயலவில்லை என்று ஒப்புக்கொள்ள முடிவு செய்தார். அதனால் கம்பெனியின் பெயருக்கு நஷ்டம் வரும் என்ற வருத்தமும் அவருக்கு இருந்தது. ஆனால் முடிக்க முடியவில்லை. என்ன செய்வது?

இந்த முடிவை குருநாதரிடம் சொல்லி, அதற்கு அனுமதி கேட்கையில், அவரோ, "முயற்சி செய். விடாதே! முடிக்க முடியும்" என்று சொல்லி அனுப்பிவிட்டார். குருநாதர் சொல்லி, இரண்டே நாட்களில், மாதக்கணக்காய் தீர்க்கமுடியாத ஒரு பிரச்சனையை, அது எப்படி ஏற்பட்டது என்பதைக் கண்டுபிடித்து, அதை சரி செய்தார் நந்தகுமார். ஆர்டரும் நல்லபடியாக முடிந்தது. அதனால், மேலும் பல ஆர்டர்கள் வந்தன. கம்பெனியும் இப்பொழுது நன்கு நடந்து வருகிறது.

"குருவின் காரணமில்லாத கருணையில் அகப்பட்டு, அதனை அனுபவித்தவர்கள்தானே, அதன் பெருமையை உணருவர்" என்கிறார் நந்தகுமார்.

பக்தன் ஒருவனுக்கு, ஒரு தவறான விஷயத்தில் ஆசை ஏற்பட்டது. அது தவறானது என்று தெரிந்தும், எப்படியாவது அது கிடைத்திட வேண்டும் என்று, பகவானிடம் பிரார்த்தனை செய்து மன்றாடினான். ஆனால், அவன் எவ்வளவு பிரார்த்தனை செய்தும் அது நிறைவேறவில்லை. அதனால், அவன் பகவானையே திட்டினான்; கோபித்துக் கொண்டான்.

நாட்கள் சென்றது. அவன் எந்த ஒன்றில் ஆசைப்பட்டானோ, அதில் அவன் வேகமும் குறைந்தது. இப்பொழுது, அவனுடைய மனது நிதானமாக இருந்தது. அப்பொழுது அவன் பகவானிடம் இப்படி சொன்னான், "நல்ல வேளையாக, நீ, நான் அன்று கேட்டதை, தரவில்லை. அப்படி நீ தராததால், இன்று எனக்கு ஒன்று கிடைத்துள்ளது. அது என்ன தெரியுமா? எங்கும் கிடைக்காத, யாராலும் கொடுக்க முடியாத 'நிம்மதி'தான் அது" என்றான்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

சிலர் மேல் ஆபிசார மந்திரங்களை பிரயோகம் செய்து விடுவர். அதனால் மிகுந்த துன்பத்துக்கு உள்ளாக நேரிடும். இந்த துன்பங்கள் ஆபிசார மந்திர பிரயோகத்தினால்தான் வருகிறது என்பதை தகுந்த பெரியவர்களின் மூலமாகவோ அல்லது ஜோதிடர்கள் மூலமாகவோ தெரிந்து கொண்டு, அதற்கு, பரிகார ஹோமங்கள் செய்வர். ஆபிசாரம் செய்தவனுக்கு, இந்த பரிகாரம் செய்வது தெரிந்தால், அது பலனளிக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக, அந்த ஹோமத்தில், பன்றியின் நெய்யை கொண்டு வந்து, வஞ்சகமாக கொட்ட ஏற்பாடு செய்வான். சாத்வீகமான தெய்வங்களை நோக்கி செய்யப்படும் அந்த ஹோமங்களில், இந்த பன்றி நெய்யை கொட்டியவுடன், அந்த தேவதைகள் அது பொறுக்காமல் ஓடி விடும்.

அதனால், பசுவின் நெய்யை கொண்டே, ஹோமம் செய்ய வேண்டும். பசு நெய்யானது, சாத்வீக தேவதைகளை ஆகர்ஷிக்கும் தன்மை கொண்டது. அதனாலேயே, கோவில்களிலும் பசு நெய்யை கொண்டே தீபம் ஏற்ற வேண்டும். அது சாத்வீக தேவதைகளின் சாந்நித்யத்தை வளர்க்கும்.

–காஞ்சி மஹாஸ்வாமிகளின் உபதேசங்களிலிருந்து

முன் அட்டை: ஜூலை 15, 2012 – சென்னை மயிலை ஸ்ரீராமகிருஷ்ணா மடத்தில் ஸ்ரீராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி



# விருத்திம் கர்நாடகே கதா

(7)

–ராமானுஜம்ஜி

---

அதிஷ்டானத்தின் மேலே சென்றடைந்தோம். அது ஒரு அருமையான இடம். சன்னதியில் ஸ்ரீசமர்த்த ராமதாசரின் தாசபோதத்திலிருந்து இனிய சுலோகங்களையும் ஸ்ரீதரஸ்வாமி இயற்றியுள்ள சில பாடல்களையும் பாடினார்கள். இதை அழகாக வேதபாடசாலை வித்யார்த்திகளும், தரிசனத்திற்கு வந்திருந்தவர்களுமாக சேர்ந்து பாடினார்கள். இவற்றில் எல்லாம் ராம நாமத்தின் பெருமையும், ஞானத்தின் உயர்வும் பேசப்படுகிறது என்று நன்றாக புரிந்தது.

அதிஷ்டானம் இருக்கும் மலைக்குன்றின் அடிவாரத்திற்கு வந்ததிலிருந்தே ஸ்ரீஸ்வாமிஜி, "இங்கு தெய்வத்தின் அருள்தான் வேலை செய்கிறது. வேறு எதுவும் இல்லை" என்று சொல்லிக்கொண்டே இருந்தார். ஸ்ரீஸ்வாமிஜி மிகவும் பவ்யமாக தனது மேல் வஸ்திரத்தை இடுப்பில் கட்டி கொண்டு, பாடசாலை மாணவர்களுடன் அமர்ந்து கொண்டார். நாங்கள் அங்கு பாதுகாப்பிற்காக போடப்பட்டிருந்த கிரில் கம்பிகளின் மீது சாய்ந்தவாறே அவரை பார்த்தோம்.

அமைதியின் உருவமாய், ஆழ்ந்த தியான நிலையில் அவர் இருக்கிறார் என்பது அவரை பார்த்தவுடனேயே புலனாகியது. அவ்வப்பொழுது அவர் ஜெபம் செய்வதும் தெளிவாக தெரிந்தது. கூடவே அவர் யாருடனோ உதடுகளை அசைத்து அசைத்து பேசுவது போலவும் தோன்றியது. கண்களுக்கு புலப்படாத யாராவது ஒருவருடன் பேசுகிறாரோ? எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை!

ஆரத்தி காண்பிக்கப்பட்ட பொழுது, சில நாய்கள் கூட்டாக வந்து ஆரத்தி முடியும் வரை, ஒன்றாக குரைத்தாவாறு இருந்தன. ஆரத்தி முடிந்தவுடன், அவை சப்தம் போடுவதை

நிறுத்தி விட்டன!! பூஜை முடிந்தவுடன் தீர்த்த பிரசாதம் அனைவருக்கும் தரப்பட்டது. அனைவரும் நமஸ்கரித்தனர். நாங்கள் அமைதியாக அந்த கோவிலை வலம் வந்தோம்.

ஓரிடத்தில் தரை மட்டத்தில் ஒரு சிறு ஜன்னல் போன்று தென்பட்டது. சற்று கவனித்தால் அது ஒரு தாழ்வான அறைக்கு இட்டு செல்வது தெரிந்தது. அதை ஸ்ரீஸ்வாமிஜி எங்களுக்கு காண்பித்தார்.

> எந்தெந்த கல்யாண குணங்கள் ஒரு மஹாத்மாவிடம் இயல்பாக அமைந்திருக்கிறதோ அதை பயில்வதே இறைவனை அடைய ஒரு சாதகன் வாழ்நாள் முழுவதும் செய்யும் சாதனை ஆகிறது.

இங்குதான் ஸ்ரீதர ஸ்வாமி பல நாட்கள் தவம் செய்துள்ளார். இந்த ஜன்னல் போன்ற இடைவெளியில் அவருக்கு உணவு வைப்பர். ஸ்வாமிகள் விருப்பப்பட்டால் உணவு எடுத்து கொள்வார். பல நாட்கள் அங்கே தனிமையிலும் தியானத்திலும் அவர் இருந்ததாக தெரிய வருகிறது.

அங்கு அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை கேள்விப்பட்டவுடன் ஸ்ரீஸ்வாமிஜி மிகவும் சந்தோஷமடைந்து அதற்கு உதவ ஆசைப்பட்டார். உடனே நாங்களும் அதற்கு ஒரு நன்கொடையை செலுத்தினோம். ஒரு ஷால் உடனே பிரசாதமாக கொடுக்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அதை மிக்க மரியாதையுடன் வாங்கி கொண்டு, பிரசாதத்தை பத்திரமாக வைக்க உத்திரவிட்டார்.

இரவு ஆகி விட்டது. ஸ்ரீஸ்வாமிஜி எங்களுடனும் பாடசாலை குழந்தைகளுடனும் சேர்ந்து உணவு எடுத்து கொண்டார். ஏக மகிழ்ச்சி எங்களுக்கு! அந்த குழந்தைகளே உணவு பறிமாறினார்கள். வயிறும் மனமும் இன்புற உண்டபின் ஸ்ரீதரஸ்வாமி பேசியுள்ள சில ஒலித்தட்டுக்களை வாங்கி வந்தோம். அவை கன்னடத்தில் இருந்தது. அதை காரில் போட்டு

கேட்டுக் கொண்டே வந்தார் ஸ்ரீஸ்வாமிஜி.

அப்படிக் கேட்டுக்கொண்டே வந்தவர், ஓரிடத்தில் சட்டென நிறுத்தும்படி சொல்லி, "கவனித்தாயா என்ன சொல்கிறார் பார்" என்றார். அவரே, ஒரு கணம் தாமதித்து விட்டு, "மகான்களின் லக்ஷணம் என்னவோ, அது ஒரு சாதகனின் சாதனை ஆகிறது என்கிறார்" என்றார். அதாவது, "எந்தெந்த கல்யாண குணங்கள் ஒரு மஹாத்மாவிடம் இயல்பாக அமைந்திருக்கிறதோ, அதை பயில்வதே இறைவனை அடைய ஒரு சாதகன் வாழ்நாள் முழுவதும் செய்யும் சாதனை ஆகிறது" என்பதுதான் அதன் அர்த்தம்.

மன நிறைவுடன் நாங்கள் தங்கி இருந்த இடத்திற்குத் திரும்பி வந்தோம். ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக குருநாதரின் அனுக்ரஹ வெள்ளத்தில் மாட்டிக்கொண்டு ஆனந்தப்பட்டதால், மறுநாளும் அப்படி ஏதாவது இருக்குமா என்ற எதிர்பார்ப்பு மனதில் ஓடிக் கொண்டிருந்தது. அது வீண் போகவுமில்லை.

ஒரு நினைவில் நிற்கும் மிருகங்களின் சரணாலயம், அபூர்வ பசுக்கள் வளரும் கோசாலை, அதிசயிக்க வைக்கும் சிவலிங்கம், புராதன கோட்டை ஒன்று, எதேச்சையாக கிடைத்த ரிஷபதேவர் மற்றும் மூகாம்பிகை பற்றிய வரலாறுகள், மகிழ வைக்கும் ஒரு மஹாத்மாவின் வரலாறு இவை எல்லாவற்றையும் அனுபவிக்க வைத்த குருநாதர் அருகிலேயே இருந்தார் எனும்பொழுது, அந்த அனுபவம் தித்திக்கத்தானே செய்யும்! திகட்டாத தித்திப்பு அது என்பதை மேற்கொண்டு வந்த சம்பவங்கள் கண்பித்தன.

சாதாரண செயல்களின் நடுவிலேயே, மிக உயர்ந்த கருத்துக்களை குருவினால் போதிக்க முடியும். பழமையான கோவில்களை காப்பாற்றுவது எப்படி என்பதற்கு, ஒரு அழகான உதாரணத்தை காட்டினார் குருநாதர். மறுநாள் ஒரு சதுர்த்தி என்று எங்களுக்கு தெரியாது.

(மதுர யாத்திரை தொடரும்)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: எனக்கு எப்பொழுதும் ஏதாவது வீட்டு வேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் ஜபம் செய்வதற்கு, கீர்த்தனம் செய்வதற்கு என்று தனி நேரம் ஒதுக்க, என்னால் முடியவில்லை. வீட்டு வேலைகளை செய்து கொண்டே கீர்த்தனம், ஜபம் செய்வதால் பலன் கிடைக்குமா?

பதில்: ஏன் கிடைக்காது? கோபியர்களும் அப்படித்தான் பக்தி செய்தார்கள்.

கேள்வி: முக்தி என்றால் என்ன? பிறப்பு, இறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை பெறுவதுதான் அது என்று எனக்கு தெரியும். ஆனால் முக்தி அடைந்த பின், நாம் என்ன செய்வோம்?

பதில்: முக்தி அடைந்த பின், "நான்" என்கிற ஜீவ அகந்தை அழிந்து தனித்தன்மை கரைந்து விடும். அந்நிலையில் பார்ப்பவன், பார்க்கப்படும்பொருள், பார்ப்பது என்ற செயல் ஆகிய மூன்றும் இல்லை. தனித்தன்மை என்ற ஜீவத்வம் இல்லாத இந்த நிலையில், உங்கள் கேள்வி எழ வாய்ப்பே இல்லை.

கேள்வி: மரணம் அடைந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்ய சொல்கின்றனர். ஆத்மா, நிர்குணம் என்றும் அதற்கு உணர்ச்சிகள் கிடையாது என்றும் சொல்கின்றனர். இது உண்மை எனில், எப்பொழுதும் திருப்தியுடன் இருக்கும் ஆத்மாவிற்காக எதற்கு பிரார்த்தனை செய்ய வேண்டும்?

பதில்: ஆத்மா என்பது நித்ய திருப்தியான வஸ்து என்பதில் ஐயமே இல்லை. ஆனால் நாம் வழக்கில் ஆவி என்றும், ஆன்மா என்றும் பேசுவது இதை அல்ல. நாம் உயிருடன் இருக்கையில்

நம்மை சுற்றி ஐந்து விதமான கோசங்கள் உள்ளன. உயிர் பிரிகையில் அன்னமய கோசம் விழுகிறது. இதுதான் பூத உடல். வாசனைகளையும், கர்ம மூட்டையயும் எடுத்துக்கொண்டு சூக்கும சரீரம், பூத உடலிலிருந்து பிரிந்து கிளம்புகிறது. இந்த சூக்கும உடலை சுற்றி உணர்வுமயமான மனோமய கோசம், அறிவுமயமாகிய விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ற சுற்றுக்கள் இருக்கின்றன.

இந்த சூக்கும சரீரத்திற்குத்தான் சொர்க்க, நரகங்கள் மறுபிறவி வரும்வரை வாய்க்கின்றன. இந்த சரீரத்தைத்தான் நாம் சாதாரணமாக வழக்கில் ஆன்மா என்று தவறுதலாக சொல்கிறோம். இறந்தவரின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்று சொல்வதே, இந்த சூக்கும சரீரம் அதிருப்தியாக இருக்கிறது என்பதைத்தான் குறிக்கிறது. அது சாந்தியடையவே பிரார்த்திக்கின்றோம். நமது பிரார்த்தனைகள் இந்த சூக்கும சரீரத்திற்கு ஏற்படும் துன்பங்களை குறைக்கும். அதனால் இத்தகைய பிரார்த்தனைகளை செய்வது நல்லது.

ஒரு குருவிடம் வெகு நாட்களாக இருந்த ஒருவர், அவரிடமிருந்து வந்து விட்டார். நான், "ஏன் வந்து விட்டீர்கள்?" என்று கேட்டேன். "அவர் சொல்கின்ற விஷயங்கள் எல்லாம், P.H.D. (பி.எச்.டி.)லெவலில் உள்ளது. என்னுடைய Maturity(பக்குவம்) எல்லாம், L.K.G(எல்.கே.ஜி.) அளவில் உள்ளது. அதுதான் வந்து விட்டேன்" என்றார் அவர். நான், "அப்படி இருந்தாலும் பரவாயில்லை. எப்பொழுதும் அவருடன் இருந்து சேவை செய்து வாருங்கள். அதுவே நன்மை பயக்கும்" என்றேன்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# பாகவத பழம்

## பாகம் 2 – அத் 12

–ஸ்ரீஸ்வாமிஜி (29)

### அத்யாயம் 12

பரீக்ஷித் கங்கைக் கரையை அடைந்து வியாஸ புத்திரரான சுகப் பிரம்மத்திடமிருந்து ஸ்ரீமத் பாகவதம் கேட்டு, இந்த சரீரத்தை விட்டு மோக்ஷம் அடையப் போகின்றான். இப்படிக் கூறிவிட்டு, பிராம்மணர்கள் சந்தோஷமாக விடைபெற்றுச் சென்றார்கள்.

பந்துக்களை வதம் செய்த பாபத்தைப் போக்க வேண்டி அஸ்வமேத யாகம் செய்ய விரும்பிய தர்மபுத்திரர், அதற்காக வரி, தண்டனை மூலம் பணம் சேர்ப்பது சரியல்ல என்று நினைத்தார். தர்மபுத்திரரின் மனம் அறிந்த வாஸுதேவர், மற்ற சகோதரர்களை வடக்கு திக்கிற்குச் சென்று, யாகத்தில் விட்டுவிட்டு செல்லப்பட்ட வஸ்துக்களை எடுத்துவர சொன்னார். பிறகு தர்மபுத்திரர் மூன்று அஸ்வமேதத்தால் வாஸுதேவனை பூஜித்தார். பிறகுதான் பகவான் துவாரகையை அடைந்தான்.

### அத்யாயம் 13

விதுரரானவர், யுத்தம் நடப்பதைப் பார்க்க விரும்பவில்லை. ஆகவே தீர்த்த யாத்திரை புறப்பட்டுச் சென்றுவிட்டார். பிறகு உத்தவரால் பகவான் பிரபாஸ க்ஷேத்திரத்தில் மறைந்ததையும், அப்படி மறையும் பொழுது, தன்னை ஸ்மரித்ததையும் கேள்விப்பட்டு அழுதார். பகவான் தனக்கு தெரிவிக்கச் சொன்ன விஷயங்களை மைத்ரேயரிடமிருந்து கேட்டு, சாந்தியை அடைந்தார்.

அவர் இப்பொழுது ஹஸ்தினாபுரம் வந்து சேர்ந்தார். அவர் தம்பிகளோடு கூடிய யுதிஷ்டிரர், திருதாஷ்ட்டிரன், யுயுத்ஸு,

சஞ்சயன், க்ருபர், குந்தி, காந்தாரி, திரௌபதி, சுபத்திரை, உத்தரை, க்ருபி, பாண்டுவின் பங்காளிகள், மற்றுமுள்ள பெண்களும், குழந்தைகளும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். விதுரரை தர்மபுத்திர் பூஜை செய்தார். ஸ்நானம், உணவு இவைகளை முடித்துக்கொண்டு விதுரர் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

அப்பொழுது தர்மபுத்திரர் விதுரரைப் பார்த்து, தங்களுடைய தீர்த்த யாத்திரை நன்றாக நடந்ததா? தீர்த்தங்களில் மக்கள் தங்கள் பாவங்களைத் தொலைத்துக் கொள்கின்றார்கள். அத்தகைய தீர்த்தங்களில் தங்களைப் போன்ற வாஸுதேவ பக்தர்கள் ஸ்நானம் செய்வதால் அத்தகைய தீர்த்தங்கள் புனிதமடைகின்றன. துவாரகை சென்றீர்களா? அங்கு பகவான் வாஸுதேவன் மற்றும் யாதவ குலத்தவர்கள் எல்லாம் நலமாக உள்ளார்களா? என்று விசாரித்தார்.

விதுரர் பகவான் மறைந்ததையும், யதுகுலம் நாசம் அடைந்ததையும் கூறவில்லை. ஏனென்றால் அதை தர்மபுத்திரர் தாங்கமாட்டார் என்பதை அறிந்திருந்தார். அரக்கு மாளிகையில் தீ வைத்தபொழுதும், விஷம் கொடுத்த பொழுதும் தாங்கள் எங்கள்மீது இருந்த பக்ஷபாதத்தினால் அன்று காப்பாற்றினீர்கள் அல்லவா! என்று சொன்னார் யுதிஷ்டிரர். இவ்வாறு விதுரரும் யுதிஷ்டிரரும் பேசிக்கொண்டார்கள்.

பிறகு திருதராஷ்டிரரை தனிமையில் பார்த்து விதுரர் பேசிக்கொண்டிருந்தார். எந்தக் குடும்பத்திற்கு பலவிதத்திலும் துரோகமும் விபத்துக்களையும் தாங்கள் செய்தீர்களோ அவர்களை அண்டி வாழ்கின்றீர்களே, வெட்கமாக இல்லையா? நூறு புத்திரர்களை இழந்த சோகம் உங்களை வாட்டவில்லையா?

உங்களுக்குப் புகழ் இல்லை; அபகீர்த்தியை அல்லவோ சம்பாதித்துக் கொண்டு உள்ளீர்கள்! அதோடு புத்திர பாசத்தில் தர்மம் தவறி அல்லவா வாழ்க்கையை நடத்தினீர்கள். மரணம் ஸமீபிப்பதைப் பார்த்தும் விரக்தி வரவில்லையா?

மனிதர்களுக்கு எப்படியாவது உயிர் வாழவேண்டும் என்ற ஆசையைப் பார்த்து நான் வியப்படைகின்றேன். பீமன் போடக்கூடிய பிண்டத்தை நாய் போல தாங்கள் சாப்பிட்டுக் கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்களே! வெட்கக்கேடு! இனி உங்களுக்கு வாழ்க்கையில் என்ன இருக்கின்றது. சொந்த பந்தங்களால், அறிய முடியாத இடத்திற்கு சென்று, உயிர் வாழும் ஆசையை அறுத்தெரியும்.

எவன் ஒருவன் தானாகவோ அல்லது பிறரது உபதேசத்தாலோ இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்படைந்தவனாய், தைர்யம் உள்ளவனாய், ஸ்ரீவாஸுதேவனை மனதில் நினைத்து, வீட்டிலிருந்து கிளம்புகின்றானோ, அவனே தீரன் ஆவான் என்றார். மேலும், வரக்கூடிய காலம், கலியுகம் என்ற மனிதர்களின் மனதை கெடுக்கும் காலம் ஆகும் என்றும் சொன்னார்.

விதுரருடைய உபதேசத்தால், இவு படுக்கையிலிருந்து கிளம்பிய திருதராஷ்டிரன் வடக்கிலுள்ள, ஹிமகிரியை நோக்கி செல்லலானான். அவனுடைய மகிஷியும், பதிவ்ரதையும், பரம ஸாத்வியும், ஸுபலனது பெண்ணுமான காந்தாரியும் அவரை பின் தொடர்ந்தாள்.

தர்மபுத்திரர் தன்னுடைய காலை அனுஷ்டானங்களை முடித்தவராய் வழக்கப்படி திருதராஷ்ட்டிரரையும் காந்தாரியையும் ஸேவிக்க வந்தார். அவர்கள், தங்களுக்கு எவ்வளவோ ஹிம்ஸைகள் செய்த போதிலும், அவர்களை சொந்த மாதா, பிதாவாகவே நினைத்து பூஜித்து வந்தார் தர்மர்.

அவர்களைக் காணாமல் துக்கித்து அழுதார். விவரத்தை சஞ்சயனிடம் கேட்க, சஞ்சயர், திருதராஷ்ட்டிரர், காந்தாரி, விதுரர் மூவரும் எங்கு சென்றார்கள் என்பதை நான் அறியேன் என்று கூறி, அவரும் அழுதார்.

அப்பொழுது தற்செயலாக தும்புரு மஹரிஷியுடன் நாரதர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் தர்மபுத்திரரைப் பார்த்து,

கவலைப்படாதே, விதுரருடைய உபதேசத்தால் திருதராஷ்ட்டிரனும், காந்தாரியும் ஹிமகிரியின் தென்பாகத்தில் உள்ள ஆஸ்ரமத்தை அடைந்துள்ளார்கள்.

பூமியின் பாரத்தைக் குறைக்கவே, கிருஷ்ணர் அவதரித்து உள்ளார். மக்களை ஒருவரோடு ஒருவர் சேர்த்து வைப்பதும், அவர்களை பிரிப்பதும் ஈஸ்வரனே. இந்த விஷயத்தில் வருந்தி பயன் இல்லை. அங்கு அவர் ஆஸனம், ஸ்வாஸம், பிராணன், இந்திரியங்கள், ஆகாசம் இவைகளை அடக்கியவராய் வாஸுதேவனை தியானம் செய்கின்றார்.

இன்றிலிருந்து ஐந்தாவது நாள் தன்னுடைய சரீரத்தை யோகாக்னியில் போக்கிக் கொள்ளப் போகின்றார். அதைத் தொடர்ந்து காந்தாரியும் அந்த அக்னியில் பிரவேசித்து தன்னுடைய சரீரத்தை விடப்போகின்றாள் என்று கூறினார். இதைக் கேட்ட தர்மபுத்திரர் அமைதி அடைந்தார். (கனியும்)



75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

# ஸ்ரீ ஸுதர்சந சதகம்

-ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளியது



ரங்கேச விக்ஞப்தி கராமயஸ்ய
        சகார சக்ரேசநுதிம் நிவ்ருத்தயே
ஸமாச்ரயே஽ஹம் வரபூரணீம் ய:
        தம் கூரநாராயண நாமகம் முநிம்

**1.ஜ்வாலா வர்ணனம் ப்ரதமம் — 1.விருப்பம் நிறைவேற**

ஸௌதர்சந்யுஜ்ஜிஹானா திசி விதிசி
        திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்ச்சி:
பாஹ்யாபாஹ்யாந்தகாரக்ஷத
        ஜகததகதங்காரபூம்நா ஸ்வதாம்நா
தோ: கர்ஜூ தூரகர்ஜத் விபுதரிபுவதூ-
        -கண்டவைகல்யகல்யா
ஜ்வாலா ஜாஜ்வல்யமாநா
        விதரது பவதாம் வீப்ஸயா஽பீப்ஸிதாநி

**2.செல்வம் பெருக**

ப்ரத்யுத்யாதம் மயூகைர்நபஸி திநக்ருத:
        ப்ராப்தஸேவம் ப்ரபாபி:
பூமௌ ஸௌமேரவீபிர்திவி வரிவஸிதம்
        தீப்திபிர்தேவதாம்நாம்
பூயஸ்யை பூதயே வ: ஸ்புரது ஸகலதிக்-
        -ப்ராந்தஸாந்த்ரஸ்புலிங்கம்
சாக்ரம் ஜாக்ரத்ப்ரதாபம் த்ரிபுவநவிஜய-
        -வ்யக்ரமுக்ரம் மஹஸ்தத்

**3.சந்தோஷம் பெருக**

பூர்ணே பூரைஸ்ஸுதாநாம் ஸுமஹதி
        லஸதஸ்ஸோமபிம்பாலவாலே
பாஹாசாகாவருத்த க்ஷிதிககநதிவஸ்-
        -சக்ரராஜத்ருமஸ்ய

ஜ்யோதிஸ்சத்மா ப்ரவாள: ப்ரகடித ஸுமநஸ்-
-ஸம்பதுத்தம்ஸலக்ஷ்மீம்
புஷ்ணந்நாசாமுகேஷு ப்ரதிசது பவதாம்
ஸப்ரகர்ஷம் ப்ரஹர்ஷம்

### 4.அறம் பொருள் இன்பம் வீடு கிட்ட

ஆராதாராத் ஸஹஸ்ராத்விஸரதி
விமதக்ஷேபதக்ஷாத்யதக்ஷாத்
நாபேர் பாஸ்வத்ஸநாபேர் நிஜவிபவ
பரிச்சிந்நபூமேஸ்ச நேமே:
ஆம்நாயைரேககண்டை: ஸ்துதமஹிம
மஹோ மாதவீயஸ்ய ஹேதே:
தத்வோ திக்ஷ்வேதமாநம் சதஸ்ருஷு சதுர:
புஷ்யதாத் பூருஷார்த்தான்

### 5.சுபசௌக்கியம் பெற

ச்யாமம் தாமப்ரஸ்ருத்யா க்வசந பகவத:
க்வாபி பப்ரு ப்ரக்ருத்யா
சுப்ரம் சேஷஸ்ய பாஸா க்வசந மணிருசா
க்வாபி தஸ்யைவ ரக்தம்
நீலம் ஸ்ரீநேத்ரகாந்த்யா க்வசிதபி
மிதுநஸ்யாதிமஸ்யேவ சித்ராம்
வ்யாதந்வாநம் விதாநச்ரியமுபசிநுதாத்
சர்ம வஸ்சக்ரபாநம்

### 6.பாவங்கள் தொலைய

சம்சந்த்யுந்மேஷமுச்சோஷித பரமஹஸோ
பாஸ்வத: கைடபாரே:
இந்தே ஸந்த்யேவ நக்தஞ்சரவிலயகரீ
யா ஜகத்வந்தநீயா
பந்தூகச்சாயபந்துச்சவிகடித
கநச்சேதமேதஸ்விநீ ஸா
ராதாங்கீ ரச்மிபங்கீ ப்ரணுதது பவதாம்
ப்ரத்யஹோத்தாநமேந:

### 7.மகிழ்ச்சியில் திளைக்க

ஸாம்யம் தூம்யாப்ரவ்ருத்யா ப்ரகடயதி
நபஸ்தாரகாஜாலகாநி
ஸ்பௌலிங்கீம் யாந்தி காந்திம் திசதி
யதுதயே மேருரங்காரசங்காம்
அக்நிர்மக்நார்ச்சிரைக்யம் பஜதி திநநிசா-
-வல்லபௌ துர்லபாபௌ
ஜ்வாலாவர்த்தாவிவஸ்த: ப்ரஹரணபதிஜம்
தாம வஸ்தத்திநோது

### 8.சத்ரு நாசமடைய

த்ருஷ்டேடதிவ்யோம சக்ரே விகசநவ
ஜபாஸந்நிகாசே ஸகாசம்
ஸ்வர்பாநுர்பாநுரேஷ ஸ்புடமிதி
கலயந்நாகதோ வேகதோடஸ்ய
நிஷ்டப்தோ யைர்நிவ்ருத்தோ விதுமிவ
ஸஹஸா ஸ்ப்ரஷ்டுமத்யாபி நேஷ்டே
கர்மாசும் தே கடந்தாமஹிதவிஹதயே
பாநவோ பாஸ்வரா வ:

### 9.மனம் திருப்தியடைய

தேவம் ஹேமாத்ரிதுங்கம் ப்ருதுபுஜசிகரம்
பிப்ரதீம் மத்யதேஸே
நாபித்வீபாபிராமாமரவிபிநவதீம்
சேஷசீர்ஷாஸநஸ்தாம்
நேமிம் பர்யாயபூமிம் திநகர
கிரணாத்ருஷ்டஸீம: பரீத்ய
ப்ரீத்யை வஸ்சக்ரவாலாசல இவ
விலஸந்நஸ்து திவ்யாஸ்த்ரரச்மி:

### 10.துன்பம் அகல

ஏகம் லோகஸ்ய சக்ஷுர்த்விவிதமபநுதத்-
-கர்ம நம்ரத்ரிநேத்ரம்
தாத்ரர்த்தாநாம் சதுர்ணாம் கமயதரிகணம்
பஞ்சதாம்ஷட்குணாட்யம்

ஸப்தார்ச்சி: சோஷிதாஷ்டாபத நவகிரண-
-ஸ்ரேணிரஜ்யத்தசாசம்
பர்யஸ்யாத்வச்சதாங்காவயவ பரிப்ருட-
-ஜ்யோதிரீதீஸ்ஸஹஸ்ரம்

**11.சமயத்தில் தவறாது பாதுகாப்புத்தர**

உச்சண்டே யச்சிகண்டே நிபிடயதி
நப: க்ரோடமர்க்கோடதி த்யாம்
அப்யஸ்ய ப்ரௌட தாபக்லபித வபுரபோ
பிப்ரதீர ப்ரபங்க்தீ:
தத்தே சுஷ்யத்ஸுதோத்ஸோ விதுரபமதுந:
க்ஷௌத்ரகோசஸ்ய ஸாம்யம்
ரக்ஷந்த்வஸ்த்ரப்ரபோஸ்தே ரசித ஸுசரித-
-வ்யுஷ்டயோ குஷ்டயோ வ:

**12.தெளிவான அறிவு உண்டாக**

பத்மௌகோ தீர்க்கிகாம்பஸ்யவநிதரதடே
கைரிகாம்புப்ரபாத:
ஸிந்தூரம் குஞ்ஜராணாம் திசிதிசி ககநே
ஸாந்த்யமேகப்ரபந்த:
பாராவாரே ப்ரவாலோ வநபுவி ச ததா
ப்ரேக்ஷ்யமாண: ப்ரமுக்த்தை:
ஸாதிஷ்டம் வ: ப்ரமோதம் ஜநயது
தநுஜத்வேஷிணஸ்த்வைஷராசி:

**13. குடும்பத்திலிருந்து விடுதலை பெற**

பாநோ! பாநோ த்வதீய ஸ்புரதி
குமுதநீமித்ர! தே குத்ர தேஜ:
தாரா: ஸ்தாராததீரோ ஸ்யநல
ந பவத: ஸ்வைர மைரம்மதார்சி:
சம் ஸந்தீத்தம் நப: ஸ்த்தா யதுதயஸமயே
சக்ரராஜாம்சவஸ்தே
யுஷ்மாகம் ப்ரௌட தாப ப்ரபவ
பவகதாபக்ரமாய க்ரமந்தாம்

### 14.நிலையான செல்வம் அடைய

ஜக்த்வா கர்ணேஷு தூர்வாங்க்குரமரி
        ஸூத்ருசாம் அக்ஷிஷு ஸ்வர்வதூநாம்
பீத்வா சாம்பச் சரந்த்ய:
        ஸவ்ருஷமநுகதா வல்லவேநா திமேந
காவோ வச் சக்ரபர்த்து: பரமம்ருதரஸம்
        ப்ரச்ரிதாநாம் துஹாநா:
ருத்திம் ஸ்வாலோகலுப்தத்ரிபுவந தமஸ:
        ஸாநுபந்தாம் ததந்தாம்

### 15. முன்ஜன்ம பாவம் தொலைய

ஸேநாம் ஸேநாம் மகோநோ
        மஹதி ரணமுகேடலம் பயம் லம்பயந்தீ:
உத்ஸேகோஷ்ணாலு தோஷ்ணாம்
        ப்ரதமதிவிஷதாமாவலீர் யாடவலீடே
விச்வம் விச்வம்பராத்யம்
        ரதபததிபதேர் லீலயா பாலயந்தீ
வ்ருத்திஸ் ஸா தீதிதீநாம்
        வ்ருஜிநமநுஜநுர்மார்ஜயத்வார்ஜிதம் வ:

### 16.எண்ணம் பலிதமாக

தப்தா ஸ்வேநோஷ்மணேவ
        ப்ரதிபடவபுஷாமஸ்ரதாரா தயந்தீ
பராப்தேவ க்ஷீபபாவம்
        பரதிதிசமஸக்ருத் தந்வதீ கூர்ணிதாநி
வம்சாஸ்திஸ்போடசப்தம்
        ப்ரகடயதி படூந் யாSSவஹந்த்யட்டஹாஸாந்
பா ஸா வ: ஸ்யந்தநாங்கப்ரபுஸமுதயிநீ
        ஸ்பந்ததாம் சிந்திதாய

### 17.பாபம் சுமராமலிருக்க

தேவைராஸேவ்யமாநோ தநுஜபட
        புஜா தண்டதர்போஷ்மதப்தை:
ஆசாரோதோதிலங்கீ லுடதுடுபடலீ
        வக்ஷ்யடிண்டீரபிண்ட:

ரிங்கஜ்ஜ்வாலாதரங்கத்ருடிதரிபுதரு
 வ்ராதபாதோ க்ரமார்க:
சாக்ரோ வச் சோசிரோகச் சமயது
 துரிதாபஹ்நவம் தாவவஹ்நிம்

### 18.மங்களம் பெற

ப்ராம்யந்தீ ஸம்ச்ரிதாநாம்
 ப்ரமசமநகரீ ச்சந்ந ஸூர்யப்ரகாசா
ஸூர்யாலோகாநுரூபா
 ரிபுஹ்ருதயதமஸ்காரிணீ நிஸ்தமஸ்கா
தாராஸம்பாதிநீ ச ப்ரகடிததஹநா
 தீப்திரஸ்த்ரே சிதுர் வ:
சித்ரா பத்ராய வித்ராவித விமதஜநா
 ஜாயதாமாயதாய

### 19.மங்களம் நிலைத்திருக்க

நிந்யே வந்யேவ காசீ தவசிகி
 ஜடிலஜ்யோதிஷா யேநதா ஹம்
க்ருத்யா வ்ருத்யா விலில்யே
 சலபஸூலபயா யத்ர சித்ரப்ர பாவே
ருத்ரோப்யத்ரேர் துஹித்ரா ஸஹ
 கஹநகுஹாம் யத்பயாதப்யயாஸீத்
திச்யாத் விச்வார்சிதோ வ:-
 -ஸசுபமநிப்ருதம் சௌரிஹேதிப்ரதா ப:

### 20.புகழ் ஓங்க

உத்யாந் பிம்பாது தாராத் நயநஜல
 ஹிமம் மார்ஜயந் நிர்ஜரீணாம்
அக்ஞாநத்வாந்த மூர்ச்சாகரஜநி ரஜநீ
 பஞ்ஜந வ்யஞ்ஜிதாத்வா
ந்யக்குர்வாணோ க்ரஹாணாம்
 ஸ்புரணமபஹரந்நர்சிஷ: பா வகீயா:
சக்ரேசார்க்கப்ரகாசோ திசது தசதிசோ
 வ்யச்நுவாநம் யசோ வ:

### 21.அஞ்ஞானம் அகல

வர்கஸ்ய ஸ்வர்கதாம்நாமபி தநுஜநுஷாம்
விக்ரஹம் நிக்ரஹீதும்
தாதும் ஸத்யோऽபலாநாம்
ச்ரியமதிசயிநீம் பத்ரபங்காநுவ்ருத்யா
யோக்தும் தேதீப்யதே யா
யுகபதபி புரோ பூதிமய்யா ப்ரக்ருத்யா
ஸா வோ நுத்யாதவித்யாம்
த்யுதிரம்ருதரஸஸ்யந்திநீ ஸ்யாந்தநாங்கீ

### 22.விரும்பிய பலன் அடைய

தாஹம் தாஹம் ஸபத்நான் ஸமரபுவி
லஸத்பஸ்மநா வர்த்மநா யாந்
க்ரவ்யாதப்ரேதபூதா த்யபிலஷிதபுஷா
ப்ரீதகாபாலிகேந
கங்காலை: காலதௌதம் கிரிமிவ குருதே
ய: ஸ்வகீர்த்தேர்விஹர்த்தும்
க்ருஷ்டிஸ்ஸாந்த்ருஷ்டிகம் வஸ்-
-ஸகலமுபநயத்வாயுதாக்ரேஸரஸ்ய

### 23.எதையும் தாங்கும் சக்தி பெற

தக்தாநாம் தாநவாநாம் ஸபஸித நிசயை:
அஸ்திபிஸ் ஸர்வ சுப்ராம்
ப்ருத்வீம் க்ருத்வாபி பூயோ நவருதிர-
-ஜரீ கௌதுகம் கௌணபேப்ய:
குர்வாணம் பாஷ்பபூரை: குசதடகுஸ்ருண-
-க்ஷாளநைஸ் தத்வதூநாம்
பாபம் பாபாச்யமாநம் சமயது பவதாம்
சஸ்த்ரராஜஸ்ய தேஜ:

### 24.பாபங்கள் விலகி நிற்க

மாகாந் மோஷம் லலாடாநல இதி
மதநத்வேஷிணா த்யாயதேவ
ஸ்ரஷ்ட்ரா ப்ரோந்நித்ரவாஸாம்புஜ-
-தளபடலப்லோஷமுத்பச்யதேவ

வஜ்ராக்நிர் மாஸ்ம நாசம் வ்ரஜதிதி
சகிதேநேவ சக்ரேண பத்தை:
ஸ்தோத்ரைரஸ்த்ரேச்வரஸ்ய
த்யது துரிதசதம் த்யோதமாநா த்யுதிர் வ:

**2.நேமி வர்ணனம் — 25.பரம்பரை செல்வம் பெருக**

சஸ்த்ராஸ்த்ரம் சாத்ரவாணாம் சலபகுலமிவ
ஜ்வாலயா லேலிஹாநா
கோஷை: ஸ்வை: க்ஷேபயந்தீ விகடித
பகவத்யோகநித்ராந் ஸமுத்ராந்
வ்யூடோர: ப்ரௌடசாரத்ருடித படு
ரடத் கீகஸ க்ஷுண்ணதைத்யா
நேமிஸ் ஸௌதர்சநீ வ: ச்ரியமதிசயநீம்
தாசதாதாசதாப்தம்

**26.அனுகூலம் வர**

தாரா சக்ரஸ்ய தாராகணகணவிததி-
-த்யோதித த்யுப்ரசாரா
பாராவாராம்பூரக்வதந
பிசுநிதோத்தாலபாதால யாத்ரா
கோத்ராத்ரிஸ்போட சப்தப்ரகடித
வஸூதாமண்டலீசண்டயாநா
பந்தாநம் வ: ப்ரதிஸ்யாத் ப்ரசமநகுசலா
பாப்மநாமாத்மநீநம்

(27 முதல் அடுத்த இதழில் இடம்பெறும்)

**"வீடு தேடி வருவான் விட்டலன்"**

பண்டரி பக்தர்கள் தொடர்புடைய புனித தலங்களிலேயே பதிவாக்கப்பட்ட, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசம் "வீடு தேடி வருவான் விட்டலன்" **D.V.D.**யாக வெளிவந்துள்ளது. தொடர்புக்கு மதுரம் ஸ்டால் **-+91-44-23727400**

## ஆலயம் தொழுவது சாலவும் நன்று -4



திரு.எஸ்.ராஜப்பன்

ஸ்ரீராமபிரான், இராவண வதம் முடித்து திரும்புகையில், திருமலைவையாவூருக்கு வந்து, இங்குள்ள "வராக புஷ்கரணி"யில் நீராடி, பெருமாளை சேவித்து விட்டு, அயோத்தி சென்றார் என்று கூறப்படுகின்றது. மலை அடிவாரத்திலிருந்து படிகளில் ஏறி செல்லும் பாதைக்கு எதிர்ப்புறம், ஸ்ரீஆஞ்சநேய மூர்த்தி சேவை சாதிக்கிறார். திருப்பதிக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் திருவேங்கடமுடையானை சேவித்து விட்டு, இங்கு வந்து ஸ்ரீப்ரசன்ன வெங்கடேச பெருமாளை சேவித்த பின்புதான், பக்தர்கள் திருப்பதி யாத்திரையின் பூரண பலனை பெறுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

மாதாந்திர திருவோண தீபம் ஏற்றும் வைபவம் திருமலை வையாவூரில் மிகச்சிறப்பு உடையதாகும். ஒரு முறை ஸ்ரீப்ரம்மதேவர் திருப்பதி சென்று, ஸ்ரீவேங்கடேசப் பெருமாளை இரண்டு விளக்குகள் ஏற்றி சேவித்தார்.

அப்பொழுது பெருமாளிடம், "இவ்விரண்டு விளக்குகளும் கலியுகம் முடியும் வரை அணையா விளக்குகளாகத் திகழ வேண்டும்" என ப்ரம்மா வேண்டினார். அதற்கு பெருமாளும் சம்மதித்து ஸ்ரீப்ரம்மாவிடம், "இனி நாம் திருமலைவையாவூரில் எல்லா திருவோண தினங்களிலும் ஜோதி ரூபமாக பக்தர்களுக்கு சேவை சாதிப்போம். மேலும் இந்த ஜோதி தரிசனம் தொடரும் வரை, உம்மால் ஏற்றப்பட்டுள்ள, இவ்விரு விளக்குகளும், அணையாமல் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். எனவே ப்ரம்மாவும் இத்திருத்தலத்திற்கு வந்து, பெருமாளை ஜோதி வடிவில் சேவித்து மகிழ்ந்தார்.

இத்திருக்கோயில் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை மணி 4 முதல் 7 வரையிலும் திறந்திருக்கும்.

இத்தகு சிறப்புகளைக் கொண்ட இத்திருத்தலத்தை சேவித்துவிட்டு, நாங்கள் நிறைந்த மனதுடன் சென்னை திரும்பினோம். இங்கு வந்து நம் சத்குருநாதரின் திருவடி தொழுது, எங்களுடைய நன்றியை தெரிவித்துக் கொண்டோம்.

08.01.2012 ஞாயிறு மதியம் நமது குருதேவர் அடியோங்களை திருமுக்கூடல் ஸ்ரீஅப்பன் ப்ரசன்ன வெங்கடேசப் பெருமாளை சேவித்துவிட்டு வருமாறு பணித்தார். நாங்கள் சென்னையிலிருந்து செங்கல்பட்டு சென்று, அங்கிருந்து வாலாஜாபாத் செல்லும் சாலையில் வாலாஜாபாத்திற்கு 5 கி.மீ.க்கு முன்பு அமைந்திருக்கும் பழைய சீவரம் கிராமத்தை அடைந்தோம். இக்கிராமம் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது. இங்கிருந்து ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பாலத்தின் வழியாக எதிர்ப்புறம் அமைந்திருக்கும் திருமுக்கூடல் கிராமத்தை அடைந்தோம்.

இத்திருத்தலத்தில் பாலாறு, வேகவதியாறு, செய்யாறு ஆகிய மூன்று நதிகளும் சங்கமிப்பதால், இத்தலத்திற்கு திருமுக்கூடல் என்னும் திருநாமம் வழங்கப்படுகின்றது. மேலும் இத்தலத்திற்கு திரிவேணி சங்கமம் என்னும் திருப்பெயரும் சூட்டப்பட்டுள்ளது. இங்கு ஸ்நானம் செய்தால், ப்ரயாகையில் ஸ்நானம் செய்ததற்குச் சமம் எனக் கூறப்படுகிறது.

தொண்டைமான் சக்கரவர்த்தி என்னும் மன்னனுக்கு திருப்பதி ஸ்ரீவேங்கடாசலபதி தமது திவ்ய ஆயுதங்களான சங்கு சக்கரம் இரண்டையும் கொடுத்தருளிட, அவ்வரசனும் எல்லாப் போர்களிலும் வெற்றிவாகை சூடினான். பின்பு அப்பேரரசன் பகவானிடம் மோக்ஷத்தை வேண்டினான். பகவான் அவனிடம், "உனது விருப்பம் திருமுக்கூடலில் நிறைவேறும்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

மன்னனும் இத்திருத்தலத்திற்கு வந்தான். சயன திருக்கோலத்திலிருந்த ஸ்ரீப்ரஸன்ன வேங்கடேசப் பெருமாள் எழுந்து நின்று இவனைக் கடாக்ஷம் செய்தார்.

(தொடரும்)



வேலூர் அருகே உள்ள அணைக்கட்டு லஷ்மி வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை – 16.6.2012

## DIVINE LIFE SOCIETY, MADURAI BRANCH

### தமிழக மாநில தெய்வீகவாழ்க்கைச் சங்க மாநாடு

இடம்: ஸ்வாமி சிவானந்தர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனை வளாகம், பத்தமடை, நெல்லை, தமிழ்நாடு

தேதி: டிசம்பர் 14,15,16. காலை 5மணி முதல் இரவு 10வரை

மேலும் விபரங்களுக்கு: ஸ்ரீஸ்வாமி சிவானந்த சுந்தரானந்தா
0452-2624265

**Postal Contact: The secretary, The Divine Life Society, Pattamadai Branch, Pattamadai Post Office, Tirunelveli -Dt**

# *பாலகர்களுக்கு ஒரு கதை*



### *தங்க உருண்டை*

ஒரு ஊரில், ஒரு பேராசை பிடித்த மனிதன் இருந்தான். அவனுக்கு பணம் என்றாலும், தங்கம் என்றாலும், உயிர். அதை தனக்காகவோ, வீட்டாருக்காகவோ, செல்வழிக்கவே மாட்டான். மாறாக அதை பத்திரமாக பாதுகாத்து வைப்பான். தன்னிடமிருந்த தங்கத்தை, அவன் உருக்கி ஒரு உருண்டையாக்கினான். அது வீட்டில் இருந்தால் ஆபத்து என்று நினைத்து, அதை கொண்டு போய், வனம் போகும் வழியில், ஒரு மரத்தின் அடியில் குழி தோண்டி, புதைத்து வைத்தான்.

தினமும் வனத்திற்கு சென்று, அந்த மரத்தினடியில் தான் போட்ட புதையல்குழியை தோண்டி, உள்ளே இருக்கும் தங்கத்தை பார்த்து வருவான். பார்த்தவுடன் மறுபடி அதை அங்கேயே வைத்து விட்டு வருவான். அந்த தங்க உருண்டையை தினமும் பார்க்காவிடில், அவனுக்கு மனம் திருப்தியாகவே இருக்காது. இதை ஒரு திருடன் கவனித்தான். எதற்காக இந்த மனிதன், அந்த குழிக்குள் பார்வையை செலுத்துகிறான் என்று நினைத்தான். ஒருநாள் அந்த திருடன் இந்த மனிதன் போனபின்பு, அவனுக்கு தெரியாமல் குழியை தோண்டி பார்த்தான். உள்ளே தங்க உருண்டையை பார்த்தவுடன், அவனுக்கு சந்தோஷம். முதல் வேலையாக அதை கொண்டு போய் உருக்கி, பணமாக்கி கொண்டான்.


அடுத்த நாள், அந்த மனிதன் வந்தான். தான் போட்ட இடத்தில் தங்கம் இல்லாதது கண்டு திடுக்கிட்டான். அவன் மனம் உடைந்து போயிற்று. பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது அவனுக்கு. அவன் "ஓ"வென்று பெருங்குரலெடுத்து அழலானான். அவனது வீட்டாரும், ஊராரும் அவன் சப்தமாக அழுவதை கேட்டு, அவனை தேடி வந்து, அவனுக்கு ஆறுதல் சொன்னார்கள். அவன் மனம் ஆறவில்லை. தான் செய்தது

மடத்தனம் என்று அவன் உணரவும் இல்லை. அப்பொழுது அங்கு ஒரு சாது வந்தார். அவர் அந்த மனிதனிடம் "உனது கஷ்டத்தை நான் தீர்க்கிறேன். உடனே, ஒரு கல் உருண்டையை கொண்டு வா. அதற்கு தங்க வர்ணம் பூசு. அதை அந்த குழியில் வை. தினமும் அதை பார்த்து வா" என்றார். அந்த மனிதன் "அய்யா! நான் பொருளை பறி கொடுத்து நிற்கையில் என்னை பார்த்து பரிகசிக்கிறீர்களே. இது நியாயமா?" என்றான்.

அதற்கு சாது "தங்கத்தை நீ பார்த்து கொண்டுதானே இருந்தாய்? அதனால் ஒருவருக்கும் பிரயோஜனமில்லையே? நீயோ அதை எப்படியும் செலவழித்திருக்க மாட்டாய். அதனால், நீ வெறும் கல்லை தங்கம் போல செய்து, அதை பார்த்து உன் மனதை திருப்திப்படுத்தி கொள்ளலாமே?" என்றார். அப்பொழுதுதான் அவனுக்கு, தனக்கோ, பிறருக்கோ, உபயோகத்திற்கு இல்லாமல் வைத்திருக்கும் பொருள், கல்லுக்கு சமம் என்பது புரிந்தது.



Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Guru/ram Consulting Private Limited

## சத்சங்க செய்திகள்

**ஜூன் 27 – ஸ்ரீபெரும்புதூரிலுள்ள விவேகானந்தா** பள்ளி வளாக **ஸ்ரீகோபாலகிருஷ்ணன் கோவில் கும்பாபிஷேகத்தில்** ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**ஜூன் 28** அன்று திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம வளாகத்தில் மாதேவகி பாடசாலா டிரஸ்ட் சார்பாக ரிக்வேத பாடசாலையை துவக்கி வைத்து ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

**ஜூன் 30** அன்று **ஆஷாட ஏகாதசி**யை முன்னிட்டு **விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் கோவிலில்** நடைபெற்ற விசேஷ திருமஞ்சனத்திலும், நாமசங்கீர்த்தனத்திலும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். திரளாக அன்பர்கள் வந்து கலந்து கொண்டனர். வந்திருந்த அன்பர்களுக்கு கோவிலில் பிரசாதம் வழங்கப்பட்டது.

**ஜூலை 3** அன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில் **குரு பூர்ணிமா** வைபவம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலையில் குருபாதுகா பூஜையும், ஸ்ரீமாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதன் திவ்ய தம்பதிகளுக்கு விசேஷ திருமஞ்சனமும் நடைபெற்றது. மதியம் திரு.ஞானேஸ்வர், ஸந்த் ஏகநாதர் குறித்து உபன்யாசம் செய்தார். மாலை கோபகுடீர குழந்தைகளின் **பக்த ப்ரஹ்லாத நாடகம்** இடம்பெற்றிருந்தது. இதில் கலந்து கொண்ட குழந்தைகள் அனைவருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி தமது திருக்கரங்களால் பரிசு வழங்கினார்கள். இரவு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள் இடம் பெற்றிருந்தன. பல இடங்களில் இருந்தும், வந்திருந்த அன்பர்களுக்கு, ஆஸ்ரமத்தில் மூன்று வேளையும் பிரசாதம் வழங்கப்பட்டது.

**ஜூலை 8–12** அன்று திருச்சி ராமலிங்க நகரில் உள்ள **ஸ்ரீசிவானந்தா பாலாலய பள்ளி**யில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பக்தவிஜயம் உபன்யாசம் செய்தார்கள். திரளான அன்பர்கள் கலந்து கொண்டு குருவருளும் திருவருளும் பெற்றனர்.

**ஜுலை 15** – அன்று சென்னை மயிலை **ஸ்ரீராமகிருஷ்ணா மடத்தில்** நடைபெற்ற **ஸ்ரீராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா**வில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தர், ராமகிருஷ்ணானந்தர் மற்றும் பல பக்தர்கள் குறித்து அருளுரை வழங்கினார்கள். ஏராளமான அன்பர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு குருவருள் பெற்றனர்.



**ஜுலை 20–28** வரை **தஞ்சாவூர்** ஸ்டேட் பேங்க் காலனி, ஓம்சக்தி விநாயகர் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் **ஸ்ரீமத்ராமாயணம்** நவாஹமாக உபன்யாசம் செய்தார். திரளானோர் வந்து, சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்றனர். பூர்த்தி நாளன்று ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில், 1500க்கும் மேற்பட்ட அன்பர்கள் சூழ **மஹாமந்திர நகரசங்கீர்த்தனம்** நடைபெற்றது. தஞ்சாவூரின் பல வீதிகள் வழியாக சென்ற, இந்த நகரகீர்த்தனத்தில் கலந்து

**சனாதனப் புதிர் : பகுதி – 42** –ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில்)

1. வஸுஷேணன், வைகர்த்தன் இந்த பெயர்கள் யாரை குறிக்கின்றன?
2. குந்தி யாருடைய பெண்? இவளை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டது யார்?
3. புருஜித் இவர் யார்?
4. ஜமதக்னி, ரேணுகா இவர்களுக்குப் பிறந்த 5 குழந்தைகளின் பெயர் என்ன?
5. வஜ்ரதத்தன் இவர் யார்?
6. வ்ருத்த கன்யா இவர் யார்?
7. இந்திரனின் கொடியின் பெயர் என்ன?
8. மஹாபாரதத்தில் காணப்படும் வ்யூகங்கள் பெயர் என்ன?
9. வஸுதேவரின் தந்தையின் பெயர் என்ன?
10. சாத்யகியின் பெயர் என்ன?
11. சுஜாதா - இந்த அம்மையார் யார்?

கொண்ட அன்பர்களின் வரிசை ஒரு மைல்கல்லிற்கும் மேலாக இருந்தது என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

**ஜூன், ஜூலை 2012** – குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக திரு.பரத் அவர்கள், **ஸ்விட்சர்லாந்து** நாட்டில் சுர், சுரிச், ஆராவ் ஆகிய நகரங்களிலும் **ஜெர்மனி** நாட்டில் ஃபிரான்க்பர்ட் நகரத்திலும் பல கோவில்களில், மஹாமந்திர கீர்த்தனத்துடன் கூடிய சத்சங்கங்களை நிகழ்த்தினார்.

## சனாதனப்புதிர் பகுதி 41 - விடைகள்- ஆத்ரேயன்

1. மைத்ரேயி ; கார்கி

2. அதிதி ; ஜூஹூ , இந்திராணி , சரமா , ஊர்வசி , ராத்ரி , ஸூர்யா , ஸ்ரீ , மேதா , தக்ஷிணா , சிரத்தா , விஸ்வவாரா , சுபாலா , கோஷா , கோதா , வஸுக்ரரின் மனைவி , அகஸ்தியரின் சகோதரி , சாஸ்வதி , ரோமாஷா , லோபாமுத்ரா , வாச் , மான்தாத்ரி , விஷ்பலா , முத்கலானி முதலானோர்.

3. அனஸூயா , சபரி , ஸ்வயம்பிரபா , அஹல்யா , ஸரமா (விபீஷணனின் மனைவி) த்ரிஜடா , மந்தோதரி , தாரா , கௌசல்யா , கைகேயி , சுமித்ரா , சீதா , மந்தரா , தாடகா , ஸூர்பனகா.

4. கைகேயி , ஸூர்பனகா ;

5. காந்தாரி , குந்தி , திரௌபதி , உத்திரா ;

6. சுகன்யா , ஜரத்காரு , பதிவ்ரதா , சகுந்தலா , லோபாமுத்ரா , ஸூலபா , விதுரா , தமயந்தி , சாவித்ரி

7. மதாலஸா (மார்கண்டேய புராணம்), தேவஹூதி (பாகவதம்) சதி (பார்வதி) (வாயு லிங்க புராணம்), உமா (மத்ஸ்ய புராணம்) சைப்யா (மார்கண்டேய புராணம்), சுநீதி (பாகவதம்), பாமினி (மார்கண்டேய புராணம்), ஷர்மிஷ்டா (மத்ஸ்ய புராணம்)

8. ராஜா ராஜசிம்ஹ பல்லவனின் மனைவியான ரங்கபதாகா

9. ராணி ராஸ்மணி , யோகிஸ்வரி பைரவி ப்ராஹ்மணி , அகோரமணி தேவி , யோகீந்த மோஹினி பிஸ்வாஸ் , கோலாப் சுந்தரி தேவி , கௌரிமா , லக்ஷ்மி மணி தேவி

10. கார்கி வாசக்னவி , வடவா பிராதிதேயீ , ஸூலபா மைத்ரேயி

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீபகவன்தாஸ் பாபா- 4

ஸ்ரீபகவன்தாஸ் பாபா சொன்னதுபோல், பச்சூலால்ஜி ரஸிகபிஹாரியை தரிசித்து விட்டு, பாபாவிடம் திரும்பிய பொழுது, பாபா அவரிடம், "ஏனப்பா பச்சூ! நீ பெரும் துரதிருஷ்டம் உடையவன்! நான் உன்னை கோயிலுக்கு அனுப்பியது, ஸ்வாமி ரஸிகதேவரின் ப்ரஸாதத்தை பெறவே! (ரஸிகதேவர் ஸ்வாமி ஸ்ரீஹரிதாஸ்ஜி பரம்பரையில் ஆறாவது ஆசார்யர்; இவரே ரஸிக்பிஹாரி கோயிலை நிறுவியவர்) அவரும் உனக்கு குரல் கொடுத்தார்! ஆனால், நீ அவரை திரும்பிக்கூட பார்க்கவில்லை. ப்ருந்தாவனத்தில், எல்லோரும் பணம் கேட்கும் ஸாதுக்கள் இல்லையப்பா! ஸாதகர்களுக்கு அருள் செய்யும் ஸாதுக்களும் இங்கு உண்டு. நீ ரஸிக்தேவஜீயின் க்ருபையிலிருந்து வஞ்சிக்கப்பட்டுவிட்டாய்! " என்று கூறினார்.

பச்சூலாலிற்கு மிகவும் வேதனை ஆயிற்று. ஆனால் அவர் பாபாவிடம், "ரஸிக்தேவ்ஜீயை பார்க்காமல் போனது எனது துர்பாக்யமே! எனக்கு அதில் பெரும் வருத்தம் தான். ஆனால் நான் ஒன்று நன்கு அறிவேன். குருநாதரைக் காட்டிலும் பெரியதாக, வேறு ஒருவராலும் அருள் செய்துவிட முடியாது. ரஸிக்தேவ்ஜீயிடம், தாங்கள் எனக்கு அனுக்ரஹம் செய்ய முடியாத அப்படி என்ன பொருள் உள்ளது? உங்கள் க்ருபையிருந்தால், நான் அடையவேண்டிய எல்லாவற்றையும் அடைந்துவிடுவேன். என்னை அவரிடம் அனுப்பியதே உங்கள் க்ருபைதான். அவர் மூலமாக, தாங்கள் எனக்கு தர எண்ணியதை, நீங்கள் எனக்கு நேராகவே தரலாமே?" என்று கேட்டார்.

பாபா சிரித்துவிட்டார். உண்மையில் அவர் சிறு குறையும் இல்லாமல் பச்சூலாலிற்கு அனுக்ரஹம் செய்திருந்தார். பச்சூலாலை நன்கு அறிந்தவர்களுக்கு இது நன்கு விளங்கும்.

மஹான்கள் ஒரு நபரை தன்னுடையவன் என்று எண்ணி அவருக்கு அபயம் அளித்துவிட்டால், அந்த நபருக்கு மட்டுமின்றி அவருடைய குடும்பத்திற்கே அனுக்கிரஹம் செய்வார். ஒருமுறை பச்சூலாலின் இளைய ஸஹோதரர் பாபாவிடம், "பாபா! எனக்கு ஒரு ஆண்பிள்ளை பிறக்க வேண்டும் என்று அருளுங்கள்" என்றார். பாபா, "உனக்கு மூன்று பிள்ளைகள் பிறப்பார்கள். அவர்களுக்கு மதுரா, ப்ருந்தாவன், கோகுல் என்று பெயரிடு" என்றார். பாபாவினுடைய ஆசிர்வாதம் பலித்தது. அவருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தன. அவரும் பாபா கூறியது போலவே, அக்குழந்தைகளுக்கு பெயரிட்டார்.

தனது நிஜலோகத்திற்கு கிளம்புவதற்கு, ஒரு நாள் முன்பு, பாபா தனது க்ருபையை வர்ஷிப்பதென்று முடிவு செய்துவிட்டார். இன்று யார் எதை கேட்டாலும், அதை நான் அளிப்பேன் என்று கூறினார். ஆனால், பாபாவினுடைய இந்த பெரும் ஆசிர்வாதத்தை யாரும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், அவரது சிஷ்யர் த்வாரகாதாஸ் என்பவருக்கு ஒரு பயம் ஏற்பட்டது.

பாபா இன்று இருக்கும் *பா*வத்தில் டடியாஸ்தானத்தையே யாருக்காவது அருளிவிடுவார் என்று எண்ணிய அவர், பாபாவின் அறையின் வாசலில் அமர்ந்துவிட்டார். அன்று பாபாவை தரிசிக்க அவர் ஒருவரையும் அனுமதிக்கவில்லை. பாபாவின் உடல் நலம் சரியாக இல்லை என்று கூறி, அவர் எல்லோரையும் அனுப்பிவிட்டார். இப்படியாக பாபா, அன்று கல்பகதருவாக விளங்கிய போதும், யாராலும் அதன் பலனை அனுபவிக்க முடியாமல் போயிற்று!

பாபா, பொறுமையின் வடிவமாகவே இருந்தார் என்று கூறவேண்டும். அவர் மஹந்தாக பதவியேற்றவுடன், யாரோ ஒருவர் பொறாமையினால், பாபாவிற்கு விஷம் கொடுத்துவிட்டார். பாபாவினுடைய சிஷ்யர்கள், நெய் கொடுத்து அதன் விளைவை சமன்படுத்தினர். பாபாவும் நலமாகிவிட்டார். ஆனால் விஷம் கொடுத்த நபருக்கு எதிராக, பாபா ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா – 109*



–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*அறத்தொடு நுண்ணியை* என்பது ஆழ்ந்து சிந்திப்பதற்கு உரியது. மேலோட்டமாகப் பார்த்தால், அறமற்றதாகத் தெரியும். நுட்பமாகப் பார்த்தால், அதுவும் அறமே என்று தோன்றும். வாலியைக் கொன்றது அறம் அன்று என்று தோன்றுகிறது. ஆராய்ந்து பார்த்தால் அறமே ஆகும் என்பதைக் கம்பர் கூற்றால் அறியலாம்.

*கவிகுலத்து அரசும் அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்;*
*அவியுறு மனத்தன் ஆகி, அறத் திறன் அழியச் செய்யான்*
*புவியுடை அண்ணல் என்று எண்ணினான் (கம்ப.4060)*
என்ற கவிதையை நோக்கி உணரலாம்.

மாவலியிடத்து வாமனனாகிச் சென்று மூவடி மண் கேட்டார் எம்பெருமான். அவனும் நம்பிக் கொடுத்தான். அளக்கும் போது வானுற ஓங்கி அளந்தார். முன்பு தானம் வாங்கிய போது இருந்த கால் வேறு. இப்போது அளக்கும் போது உள்ள திருவடி வேறு அளவு கருவியில் ஏமாற்றுவது அறமாகுமா? அதனால், சிலப்பதிகாரத்து, இளங்கோவடிகள்.

*மூ உலகும் ஓரடியால் முறை நிரம்பாவகை முடியத்*
*தாவிய சேவடி* என்றார்.

முறையற்ற முறையில் தாவிய சேவடியாம். அந்த வாமனாவதாரத்துக் கால் செய்த அறத் தவறுக்காகத்தான் தண்டனையாக இராமாவதாரத்தில் பாதுகை இல்லாமல் ஆரணியத்தில் நடந்து கால்சிவக்கும்படி ஆயிற்று என்பது இளங்கோவடிகள் கூறுவது.

*தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து* என்பது சிலம்பு. ஆனால் அதுவே ஆழ்ந்து நுட்பமாகப் பார்த்தால் அறமே

என்கிறார் ஆண்டாள். "*ஓங்கி உலகு அளந்த உத்தமன்*" என்பது அவர் வாக்கு. குட்டையாய் இருந்து தானம் வாங்கி, ஓங்கி உலகு அளந்தவனை உத்தமன் என்கிறார் ஆண்டாள்.

பிறரைக் கெடுத்து, தானும் கெடுபவன் அதமாதமன். தான் வாழப் பிறரைக் கெடுப்பவன் அதமன். பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் தான் மட்டும் வாழ்வதை நினைக்கிறவன் மத்திமன். தனக்கோர் குறை வந்து, தான் கெட்ட பெயர் அடைந்தாலும் பிறரை வாழ்விப்பவன் உத்தமன்.

பகவான் அளவு கருவியை மாற்றித் தான் குறைபடினும், வானோர் வாழ வேண்டும் என்று நினைத்ததனால், உத்தமன் ஆகிறான். இவ்வாறு பெருமான் செய்யும் அறங்கள் நுண்ணியன.

*அமைவுடை அறநெறி முழுவதும் உயர்வற உயர்ந்த*
*அமைவுடை முதல்கெடல் ஒடிவு இடை அற நிலம் அதுவாம்,*
*அமைவுடை அமரரும் யாவையும் யாவரும் தானாம்*
*அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே!* (திருவாய் 1.3:3) என்று வியக்கிறார் நம்மாழ்வார்.

*வேள்வியும் மறனும் விரும்பொடு வெய்யை*

பெருமானே! தன்னடைந்தார் எல்லார்க்கும் நலம் செய்தற்காக நன்மைகளை உண்டாக்கும் வேள்வியை எப்பொழுதும் விரும்புகிறாய். தன்னடைந்தார்க்கு வரும் தீமைகளை அகற்றத் தீயவர்களை அழிக்கும் மறத்தையும் விரும்புகிறாய் என்கிறார். துஷ்ட நிக்கிரகம், சிஷ்ட பரிபாலனம் இரண்டும் பெருமானுக்குரியது. ஆதலின் வேள்வியும், மறனும் ஆகிய இரண்டையும் பகவான் விரும்புகிறான்.

வேள்வியில் விருப்பொடு மறனும் வெய்யை நிரல் நிறையாற் கூறும்பொழுது, வெய்யை என்பதற்கு விரும்புகிறாய் என்பது பொருள் ஆனாலும், கொடுமை என்ற தொனியும் அதனுள்ளே அமைந்து, வேள்வியை விரும்புகிறாய். மறத்தை நிகழ்த்துங்கால் கொடுமை உடையவனாகிறாய் என்ற பொருள் பெற்று நலம் செய்கிறது.

(தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் - 6

பகேவாடிக்கு மதிராஜர் திரும்பிய பொழுது, சிலர் வந்து அவரிடம் "உமக்கு குழந்தை பிறந்ததை ஒட்டி, பஞ்சாயத்தில் சிறப்பு விருந்து ஏற்பாடு செய்" என்றனர். அந்த சில பெரியவர்கள் சமயோசிதமாக பஞ்சாயத்து கூடிய பொழுது வழக்கை ஆரம்பிக்கவே விடவில்லை. அவர்கள் பிறந்த குழந்தை பற்றி விசாரிக்க ஆரம்பித்தனர். மதிராஜரும், ஈசான்ய குரு "உன் மகன் வழக்கை தீர்த்து விட்டான் பார்" என்று சொன்னதை நினைத்து கொண்டார். சமயோசிதமாக, "இந்த நல்தருணத்தில் யாருக்கும் எந்த தண்டனையும் விதிக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை" என்று அறிவித்தார். ஒப்பிற்கு சம்பந்தப்பட்ட அந்த பையனை "இனி சரியாக நடந்து கொள்" என சொல்லி அனுப்பி வைத்தார். வழக்கை போட்டவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. பசவர் பிறந்ததினால், இந்த பிரச்சனை தவிர்க்கப்பட்டது. அதனால் பசவரின் மேல் அந்த பையனின் குடும்பத்தாரும், சேரியை சேர்ந்தவர்களும், மிக்க பிரியம் கொண்டனர்.

பசவர் மேல் அக்கா நாகம்மா மிக பிரியம் வைத்திருந்தாள். பசவரைக் கொஞ்சி கொஞ்சி, விளையாடுவாள். மூன்று வயதில், பசவருக்கு அக்ஷராப்யாசம் செய்வித்தனர். எந்தவொரு விஷயத்தையும் பசவர் ஆழமாக விசாரித்து ஏற்கும் போக்கு சிறு வயதிலேயே இருந்தது. "எதற்கு அக்ஷராப்யாஸம், பிரணவம் என்றால் என்ன, அதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டு துளைத்து விடுவான் குழந்தை. குழந்தைதான் கேட்கிறதா என்று அதிசயிக்கும் வண்ணம் இருக்கும்.

பசவருக்கு பாடங்கள் கற்று கொடுக்க வந்த ஆசிரியர் எதையும் ஒரே ஒருமுறைதான் பசவருக்கு சொல்ல வேண்டி இருந்தது. உபநிடத வாக்கியங்கள் ஆகட்டும், ஸ்தோத்திரங்கள் ஆகட்டும் அல்லது கன்னட மொழி பக்தர்களின்

பாடல்களாகட்டும் எதுவானாலும் ஒரே முறையில் கற்று கொண்டு விடுவான் குழந்தை. ஆனால் பசவரின் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் கஷ்டப்படுவார் ஆசிரியர். மதிராஜரிடம் "உன் பையனின் கேள்விக்கெல்லாம் என்னால் பதில் கொடுக்கவே முடியவில்லை" என்று சிரித்து கொண்டே, ஆசிரியர் அடிக்கடி சொல்வார்.

குழந்தை "உண்மையான அறிவை எப்படி பெறுவது? விவாதத்தினாலா அல்லது விசாரத்தினாலா?" என்பான். ஆசிரியர் குழந்தைக்கு எப்படி புரிய வைப்பது என யோசிக்கையில், பசவரே "ஸ்வாமி! அனுபவம் இல்லாவிடில் விவாதமும், விசாரமும் பிரயோஜனமில்லை அல்லவா" என்று சொல்லி விட்டு அமைதியாயிருப்பான். ஆசிரியருக்கு ஆச்சரியம் அடங்க வெகு நேரம் ஆகும்.

மதிராஜரின் மாமனார் சிவதேவய்யா நாகம்மாவிற்கு வரனாக கூடலசங்கமத்தை சேர்ந்த சிவஸ்வாமி என்பவரை பார்த்து வந்தார். பகேவாடியிலேயே நடைபெற்ற நாகம்மாவின், திருமணத்தின்பொழுது, பசவருக்கு உபநயனமும் ஆயிற்று. ப்ரும்மோபதேசம் ஆகுகையில், ஒரு விசேஷ அனுபவம் பசவருக்கு ஏற்பட்டு இருந்தது. இதை ஒருவரிடமும் அவர் சொல்லவில்லை. திருமணத்தில் கலந்து கொள்ள பசவரின் மாமா (மதலாம்பிகையின் சகோதரன்) பலதேவராசர் வந்திருந்தார். அவர் அரசு கருவூலத்தில் ஒரு மந்திரி. இந்த சம்பந்தம்தான் பசவர் பின்னாளில் பிரபலமாக பெரும் காரணமாக இருந்தது.

பசவரும், கூடலசங்கமத்திற்கு நாகம்மாவுடன் சென்று ஈசான்ய குருவிடம் கல்வி கற்பது என்று முடிவாயிற்று. சில தினங்களில் குடும்பத்தாருடன் சென்று, பசவர் ஈசான்யகுருவை நேரில் பார்த்து வணங்கினார். நன்கு வளர்ந்த பின், பசவருக்கு குருவுடனான முதல் சந்திப்பு இது. குரு சிநேகமாக புன்னகைத்தவாறே பசவரின் சிரசின் மேல் கை வைத்து ஆசிர்வதித்தார். அப்பொழுது, மறுபடி பசவருக்கு ப்ரும்மோபதேசத்தின் பொழுது ஏற்பட்ட அனுபவம் ஏற்பட்டது.

(தொடரும்)

| | |
|---|---|
| "மதுரமுரளி" சந்தா<br>3ஆண்டு - ரூ 360<br>1 ஆண்டு - ரூ 120<br>5 ஆண்டு - ரூ 600<br>For Details:<br>**+91-44-24895875** | "மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:<br>Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83<br><br>உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும். |

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏகாதசி | ஆகஸ்டு 13 , 27 செப்டம்பர் 12, 26 |
| ஆக 5 - 7 | கடப்பா |
| ஆகஸ்டு 9-18 | கோகுலாஷ்டமி உற்சவம் |
| ஆகஸ்டு 20 | பேர்ணாம்பட்டு கோவில் கும்பாபிஷேகம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.